**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 22.10.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் கனமழையும் மற்ற பகுதிகளில் மிதமான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06-22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மிதமான மிதமான முதல் கன மழையுடன் மணிக்கு 6-22 கிமீ வேகத்தில் காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நாட்களில் பகல்நேர வெப்பநிலையானது 2-3 டிகிரி செல்சியஸ் வரையிலும் குறைய வாய்ப்புள்ளது.
- மேற்கு மலைத்தொடர் அடிவாரங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் போதியவடிகால் வசதி மேற்கொள்ளவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டாம். மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்மேலாண்மை நடவடிக்கைகளை மழையில்லா நாட்களில் செய்யவும்.
- மழை எதிர்பார்க்கபடுவதால், வட கிழக்கு பருவ மழை கால விதைப்பினை தொடரலாம். மானாவாரியில் தானியங்கள், பருத்தி மற்றும் பருப்பு வகைகளை விதைக்கலாம். விதைப்பதற்கு முன் விதைகளை பேசில்லஸ் சப்டில்லிஸ் 10 கிராம்/கிலோ, அதை தொடர்ந்து அசோஸ்பைரில்லம் 250 கிராம் /ஏக்கர் என்ற விகிதத்தில் விதை நேர்த்திசெய்து விதைக்கவும். மானாவாரி விதைப்பில் 20 அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்பு அமைத்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும்.
- தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும். புதிய நடவினை ஒத்தி வைக்கவும். குறைந்த வெப்பநிலையானது 23$^{0}$ செ ஆக இருப்பதால், சம்பா பருவத்திவ் நடவு செய்த பயிர்களில் துத்தநாக குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட்டுடன் மற்றும் 1 சதவீதம் யூரியா கலந்து 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும்.
- சோளம் மற்றும் கம்பு பயிரில் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரியில் விதைக்கப்பட்ட பயிர் களைதல் அல்லது பாடுவாசி நடுவதன் மூலம் பயிர் எண்ணிக்கையினைப் பராமரிக்கலாம்.
- மழை காணப்படுவதால் நிலக்கடலையை மழையில்லா நாட்களில் அறுவடை செய்து சேமிக்கவும்.

- பருத்தியில் தொடர் மழையால் பூ அல்லது பூ மொட்டுகள் உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 ppm அதாவது ஒரு லிட்டர் தண்ணீரில் 40 மில்லி கிராமை கலந்து மழையில்லா நாட்களில் தெளிக்கவும். பருத்தியில் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் போதுமான வடிகால் வசதியை ஏற்படுத்தவும். வேகமான காற்றுடன் மழை எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு சாயாமல் இருக்க கரும்பு தோகையை வைத்து ஒன்றுடன் ஒன்று இணைத்து கட்டவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் போதுமான வடிகால் வசதியை ஏற்படுத்தவும். வேகமான காற்றுடன் மழை எதிர்பார்க்கப்படுவதால் வாழை மரங்களுக்கு சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.
- மரவள்ளிக்கிழங்கில் ஒரு சில இடங்களில் தொடர்ந்து மழை காணப்படுவதால் நுண்நூட்ட பற்றாக்குறையால் வெளிரி காணப்படும். இதை நிவர்த்தி செய்ய ஒரு சத பெர்ரஸ் சல்பேட் உடன் 0.5 சத துத்தநாக சல்பேட் கலந்து தெளிக்கவும்.
- திராட்சையில் அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் இரவு நேர வெப்பநிலை குறைவாக இருப்பதால் சாம்பல் நோய் மற்றும் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 0.3 சதவீதம் நனையும் கந்தகத்தையும், அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை தெளிக்கவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும். பூஞ்சான நச்சு பாதிக்கபடாமல் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யவேண்டும். பகல்நேர வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழி கூடாரங்களைச் சுற்றிலும் நன்கு காய்ந்த தடிமனான சாக்குப்பைகளை தொங்கவிட்டு குளிரினால் பாதிக்கப்படுவதை தவிர்க்கவும்.
- மழையில் புதிதாக முளைத்த புற்களை கால்நடைகளுக்கு கொடுக்கவோ மேய்ச்சலுக்கு விடவோ வேண்டாம்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 22.10.2025 முதல் 26.10.2025 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 23 - 32°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 24°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-100 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06 - 30 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- வரும் நாட்களில் கன மற்றும் மிதமான மழை முதல் பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பண்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும்.
- நீரை வடிகட்டிய பிறகுஇ நீர் தேங்கி நிற்கும் அழுத்தத்திலிருந்து மீள்வதற்கு பின்வரும் ஏதாவது ஒரு தெளிப்பினை மேற்கொள்ளலாம்.
  - ஒளிச்சேர்க்கை செயல்பாட்டை அதிகரிக்க பிராசினோலைடு ஃ 0.5 பிபிஎம்
  - தண்டு இருப்பு பயன்பாட்டை அதிகரிக்க சாலிசிலிக் அமிலம் ஃ 100 பிபிஎம்
  - போரிக் அமிலம்(0.3%) + ZnSO 4 (0.5%) + FeSO 4 (0.5%) + யூரியா (1.0%)

- மழையை கருத்தில் கொண்டு, நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும்.
- நெல் வயலில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.
- வேகமான காற்றுடன் மழை எதிர்பார்க்கப்படுவதால் வாழை மரங்களுக்கு சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஓட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்.

**3. தெற்குமண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிகவும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 26-31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19-24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 12-22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு-தென்மேற்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- பாசனப்பயிர்களுக்கு பாசனம் செய்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அனைத்து பயிர்களுக்கு மருந்து தெளிப்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பருத்தி, உளுந்து மற்றும் மக்காச்சோள பயிரில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலங்களில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் விவசாயிகள் தொடர்ந்து வயலைக் கண்காணித்து மழை நீர் தேங்காமல் இருக்க வடிகால் அமைத்து பயிர்களை பாதுகாக்கவும்
- நெற்பயிர் சாய்ந்துவிட்டாமல் இருக்க முறையான வடிகால் வாய்க்கால்களை அமைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- மானாவாரி விதைப்புக்கு ஆயத்தமாகவும் நிலங்களில் வடிகால் வசதியுடன் விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- மழையில் புதிதாக முளைத்த புற்களை கால்நடைகளுக்கு கொடுக்கவோ மேய்ச்சலுக்கு விடவோ வேண்டாம்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 22.10.2025 முதல் 26.10.2025 வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 20-32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 16-24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-100 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 04-32 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று மேற்கு - தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

### நெல்

நெல் வயல்களில் நேரடி விதைப்பு மற்றும் நடவு வேலைகளை ஒத்திவைக்கவும். விளைநிலங்களில் மழைநீர் தேங்காத வகையில் உடனடியாக முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தி மழைநீரை வெளியேற்றவும். பயிர் பாதுகாப்பு வேலைகளான உரம் வைத்தல் மற்றும் தெளிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டாம்.

### மக்காசோளம்

விதைப்பு / நடவு வேலைகளை ஒத்திவைக்கவும். விளைநிலங்களில் மழைநீர் தேங்காத வகையில் உடனடியாக முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தி மழைநீரை வெளியேற்றவும். பயிர் பாதுகாப்பு வேலைகளான உரம் வைத்தல் மற்றும் தெளிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டாம்.

மக்காச்சோளம் பயிரில் குருத்து ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக் குருத்தை தாக்குகிறது. இதனால் நடுக்குருத்து அழுகி விடும். ஒரு எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் மீன் இறைச்சிப் பொறியினை அமைத்து குருத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.
இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100மில்லி என்ற அளவில் குளோரோட்ரானிப்ரோல் மருந்தினை தண்ணீரில் கலந்து மழை இல்லாத நாட்களில் தெளிக்கவும்.

### பருத்தி

விதைப்பு / நடவு வேலைகளை ஒத்திவைக்கவும். விளைநிலங்களில் மழைநீர் தேங்காத வகையில் உடனடியாக முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தி மழைநீரை வெளியேற்றவும். பயிர் பாதுகாப்பு வேலைகளான உரம் வைத்தல் மற்றும் தெளிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டாம்.

உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். பருத்தி வயலில் அடியுரம் இட இயலாத சூழ்நிலையில், விதைத்த 25 நாளில் உரமிடலாம். ரகங்களுக்கு 50 சத தழை மற்றும் சாம்பல் சத்தும், முழுமையான அளவில் மணி சத்தையும் அடியுரமாக இடவேண்டும். எஞ்சியுள்ள தழை மற்றும் சாம்பல் சத்தை 40-45ம் நாள் இடவேண்டும். வீரிய ஒட்டு இரகங்களுக்கு, தழைச்சத்தை மூன்று முறையாக அடியுரமாக 45 மற்றும் 60ம் நாள் இட வேண்டும்.
இலைத் தெளிப்பாக 2 சதவீத டி.ஏ.பி மற்றும் 1 சதவீத பொட்டாசியம் குளோரைடு அல்லது பாலிபீடு மற்றும் மல்டி பொட்டாசியத்தை அளிப்பதன் மூலம் பருத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

### நிலக்கடலை

நிலவும் பருவச்சூழ்நிலையில் நிலக்கடலை பயிரில் துரு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு டைபகோனசோல் 25 % இசி 100 மில்லி மருந்தை 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

### கத்திரி

நிலவும் பருவச்சூழ்நிலையில் கத்திரி பயிரில் புள்ளிவண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை வண்டுகள் இலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகள் சல்லடை போல் காணப்படும். செடிகளில் வீரியம் குன்றி, நாளடைவில் காய்ந்து கருகி உதிர்ந்து விடும்.
இலைகளில் உள்ள வண்டினப் புழுக்களையும், முட்டை கூடுகளையும் சேகரித்து அழிக்கவும். மேலும் 1 டாங்கிற்கு 35 கிராம் என்ற விகிதத்தில் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

### தக்காளி

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். நிலவும் பருவசூழ்நிலை காரணமாக தக்காளி பயிரில் முன்பருவ இலைக்கருகள் நோய் தாக்குதல் அறிகுறிகள் தென்படலாம்.
இதனை கட்டுப்படுத்த நடவு செய்த 30 மற்றும் 50 நாட்களில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி என்ற அளவில் ஹெக்ஸகோனசோல் 5%எஸ்சி (அல்லது) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி என்ற அளவில் ப்ரோபிகோனசோல் 25% இசி இவற்றில் ஏதாவது ஒன்றை தெளிக்கவும்.

**கொய்யா**

கொய்யா பழப் பயிரில் தேயிலைக் கொசுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்குதலின் அறிகுறிகள் இலைகள் மற்றும் கொய்யா பழங்களில் காணப்படும். பாதிக்கப்பட்ட செடியின் பாகங்களை வெட்டி அகற்றி சூரிய ஒளி நன்கு உள் செல்லும் படி கவாத்து செய்தல் வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 50 மில்லி வேப்ப எண்ணெய் உடன் 10 மில்லி புங்கம் எண்ணெய் என்ற அளவில் சேர்த்து கலந்து தெளிக்கவும். உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

**தோட்டக்கலை / காய்கறிப் பயிர்கள்**

பயிர்களுக்கு நீர்பாசனம் செய்ய வேண்டாம். விளைநிலங்களில் மழைநீர் தேங்காத வகையில் உடனடியாக முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தி மழைநீரை வெளியேற்றவும். பயிர் பாதுகாப்பு வேலைகளான உரம் வைத்தல் மற்றும் தெளிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டாம்.

**வேளாண் ஆலோசனை**

கன மழை எதிர்பார்க்கப்படுவதால் இந்த காலகட்டத்தில் விவசாயிகள், விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், உரமிடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கவும்.

விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தும்படியும், மழைநீரினை பண்ணைக் குட்டைகளில் சேகரிப்பதற்கான கட்டமைப்பினை ஏற்படுத்தி கொள்ளும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கரும்பு பயிருக்கு விட்டம் கட்டும்படியும், பப்பாளி மரங்கள் மற்றும் வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கால்நடை**

பெரும்பாலும் மழைக்காலத்தில் தொண்டை அடைப்பான் நோய் தாக்குதல் மிகுதியாக காணப்படும். இந்நோயால் கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

நோயின் அறிகுறியாக மாடுகளில் கடுமையான காய்ச்சல் ஏற்படும். தலை, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற பகுதிகளில் வீக்கம் ஏற்படும்.

இந்நோயிலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க, விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடவேண்டும்.

## 4. மலைப்பிரதேச மண்டலம்

**மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 16-20°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-12°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-12 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.**

**வேளாண் அறிவுரை**

- போதிய வடிகால் வசதி வழங்குதல். உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற உழவியல்/ பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.
- உருளைக்கிழங்கில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 (மற்றும்) 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம் /லிட்டர் (அல்லது) குளோரோதலோனில் @ 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் இலைவழி தெளிப்பாக, மழை இல்லாத நேரங்களில் தெளிக்கவும்.
- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.

- பீட்ரூட் பயிரில் செர்கோஸ்போரா இலைப் புள்ளியை நிர்வகிக்க, • பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழிக்க வேண்டும். • பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும். • காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.3% 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- காய்கறி பயிர்களை தாக்கும் நச்சுயிரி நோய்களுக்கான ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் (மேரக்காய், பாகற்காய், மிளகாய், பீன்ஸ்) • நோயற்ற விதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் • ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது • நச்சுயிரி தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து, அழிக்க வேண்டும் • நாற்றங்கால் படுக்கைகளின் மீது நைலான்வலை (அ) வைக்கோல் கொண்டு மூட வேண்டும் • மிளகாய் போன்ற காய்கறி பயிர்களை பயிரிடும் போது, 2-3 வரிசை மக்காச்சோளம் (அ) சோளத்தை வரப்பு பயிராக பயிரிட வேண்டும் • ஒட்டுப் பொறிகளை (நீலம்&மஞ்சள், முறையே) ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வயலில் பொருத்தவும் • தேவையெனில், டைமெத்தோயேட் @ 2.0 மிலி/லிட்டர் (அ) தையாமீதக்ஸம் @ 0.2 மிலி/லிட்டர் (அ) இமிடாக்ளோப்ரிட் @ 0.2 மிலி/லிட்டர் என்ற அளவில்கைத் தெளிப்பான் கொண்டு மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- பூண்டு பயிரில் ஃபுசேரியம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த/ கார்பென்டசிம் @ 1கிராம்/லிஅல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லிஎன்ற அளவில்/ மழை இல்லாத நேரங்களில் மண்ணில் ஊற்ற வேண்டும்.
- குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த/ ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மா / அஸ்பெரெல்லாம் / பேசிலஸ்சப்டிலிஸ் @ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- 5 மாத வயதுள்ள வாழை மரங்களுக்கு மரக் கம்பங்களைப் பயன்படுத்தி ஆதரவு அளிக்கவும்/ வடிகால் வசதி செய்து/ உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும். அழுகும் மற்றும் அழுகிய இலைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்.
- கால்நடைகளை மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். விலங்குகளை வெளியில் மேய்க்க அனுமதிக்காதீர்கள். மின் கம்பங்கள் மற்றும் மரங்களுக்கு அடியில் கால்நடைகளை கட்ட வேண்டாம். உள்ளூர் கால்நடை மருத்துவருடன் கலந்தாலோசித்து/ உங்கள் கால்நடைகளுக்கு பருவ கால நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுங்கள்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை **26 - 31**$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **18-25**$^{o}$செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் **80-90** சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் **70-90** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **04-20** கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று மேற்கு - தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- தற்போது வடகிழக்கு பருமழை துவங்கியுள்ளதால், அனைத்து வட்டாரங்களிலும் தொடர்ச்சியாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. எனவே விவசாயிகள் பயிர்கள் சாகுபடி செய்துள்ள வயல்களில் தண்ணீர் தேங்காமல் தடுக்கவும், அதிகப்படியான நீரை வெளியேற்றவும், வயலில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். மேலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு விதைப்பு, நீர்ப்பாசனம், உரமிடுதல் மற்றும் ரசாயனங்கள் தெளிப்பதைத் தவிர்க்கவும். ஐந்து மாதங்களுக்கும் மேலான வாழை மரங்கள் சாயாமல் இருக்க மூங்கில் கொண்டு முட்டுக்கொடுக்கவும், கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கரும்பு பயிர்கள் சாயாமல் இருக்க பக்கத்தில் இருக்கும் கரும்பு பயிரின் இலைகளை ஒன்றாகக் கட்டி வைக்க வேண்டும்.மழைநீர் வழிந்து ஓடும் வேகத்தை குறைக்கவும், மண் அரிப்பைக் தவிர்க்கவும் மானாவாரி நிலங்களில் 10மீ இடைவெளியில் நாட்டுக்கலப்பை மூலம் குறுக்கு உழவு செய்ய வேண்டும்.

- *நெல் நடவு செய்யவுள்ள விவசாயிகள் தூர் நன்கு கிளைத்து நல்ல மகசூல் பெற ஏக்கருக்கு 5 கிலோ துத்தநாகத்தை கரைக்கும் பாக்டீரியாவுடன் 10 கிலோ துத்தநாக சல்பேட் உரத்தையும் அடியுரமாக இட வேண்டும். மேலும் துத்தநாக சல்பேட் உரம் மற்றும் பாக்டீரியாவை ஒன்றாக கலந்து இடக்கூடாது. குறைந்தபட்சம் 5 – 10 நாட்கள் இடைவெளியில் இட வேண்டும்.*

**கால்நடை ஆலோசனைகள்**

**<u>தோல் கழலை நோய் / பெரியம்மை நோய்</u>**

- *தற்போது விட்டு விட்டு பெய்து வரும் மழை காரணமாக காற்றின் வேகம், ஈரப்பதம் மற்றும் வெப்பம் ஆகியவை கால்நடைகளை தாக்கும் கொசுக்கள் மற்றும் ஈக்கள் பெருகுவதற்கு உகந்ததாக உள்ளது.*
- *இத்தகைய சூழலில் மாடுகளைத் தாக்கும் தோல் கழலை நோய் / பெரியம்மை நோய் எனும் நச்சுயிரி நோய் பாதிக்கப்பட்ட மாடுகளைக் கடித்த கொசு, கடிக்கும் ஈக்கள் மற்றும் உண்ணிகள் ஆகியவை மற்ற மாடுகளையும் கடிக்கும் போது, இந்த நோயானது மற்ற கால்நடைகளுக்கும் எளிதாக பரவும் சூழல் நிலவுகிறது.*
- *பாதிக்கப்பட்ட மாடுகளில் 2-3 நாட்களுக்கு லேசான காய்ச்சல், அதன் பின் தோலுக்கு அடியில் சிறிய கழலை போன்ற கட்டிகளும் காணப்படும். இது மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட மாடுகளில் கட்டிகள், வாய், மூச்சுக்குழல், உணவுக்குழல், நெரிக்கட்டுதல் (நிணநீர் கட்டி வீக்கம்), கால்களில் வீக்கம், பால் உற்பத்தி குறைதல், சினைப் பிடிக்காமை மற்றும் கருச்சிதைவு போன்ற அறிகுறிகள் தென்படும். சில நேரங்களில் இறக்க நேரிடும்.*
- *இந்த நோய் தாக்கப்பட்ட பால் கறக்கும் மாடுகளில் பால் உற்பத்தி பல வாரங்களுக்கு குறைந்து காணப்படும்.*

**<u>தோல் கழலை நோய் வராமல் தடுக்க கடைப்பிடிக்க வேண்டிய சில உத்திகள்</u>**

- *கொசு, கடிக்கும் பூச்சிகள் மற்றும் உண்ணிகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாடுகளை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லக் கூடாது.*
- *புதிதாக சந்தையிலிருந்து மாடுகள் வாங்கும் பட்சத்தில், நோயின் அறிகுறி உள்ளதா என்று நன்கு கவனித்து வாங்க வேண்டும். வாங்கிய பின்பு குறிப்பிட்ட காலத்திற்கு மாடுகளை தனிமைப்படுத்தி வைத்து பின்பு மந்தையில் சேர்க்க வேண்டும்.*
- *பாதிக்கப்பட்ட மாடுகளை தனிமைப்படுத்த வேண்டும். மேலும், மாடுகள் கட்டும் இடங்கள், பயன்படுத்தும் வாகனங்கள் போன்றவற்றை கிருமிநாசினி (அதாவது 2% லைசால் அல்லது 2-3% ஹைப்போகுளோரைட் கரைசல்) கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். நோயுற்ற மாடுகளை காலம் தாழ்த்தாமல் உடனடியாக அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.*

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 25°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-100 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 04-24 கி.மீ ஆகவும் பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- *அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். நாற்றங்கால் வயலுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.மேலும் உரமிடுதல்இ மருந்து தெளித்தல் போன்றவற்றை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.*

- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம் மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும்இ நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷம் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும் தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி,ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி,ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். இளம் நாற்றங்காலில் இலை பேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்கத்தின் அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 50 மி.லி தெளிக்கலாம். நெல் பயிரில் இலையுறை கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயின் அறிகுறிகள் தென்படும் போது வேப்ப எண்ணெய் 3 ு அளவில் தெளிக்கலாம்.
- அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- மழைக்காலத்தில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும்.
- நல்ல காற்றோட்ட வசதியை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும். இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடை கொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் வாரம் ஒருமுறை பிளிச்சிங்பௌடர் தூவிவிட வேண்டும் இது நோய்த் தொற்றை தடுக்க உதவும்.
- கால்நடை கொட்டகைகளில் மின்சாரம் கசிவதைத் தவிர்க்க தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும்.
- குளம்பு அழுகல் நோயை தவிர்க்கவும்இ ஒட்டுண்ணி நோயை தவிர்க்கவும் மழை பெய்யும் போது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது.
- ஆட்டுக்குட்டிகளை நுரைஈரல் அழற்சி நோயிலிருந்து பாதுகாக்கஇ கதகதப்பான கொட்டகை மற்றும் ஈரத்தன்மை இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.
- பன்றிக்குட்டிகளை குளிர் தாக்காமல் இருக்க தக்க நடவடிக்கை அடுக்க வேண்டும்தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெட்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு முறையிலோ,கூட்டமாகவோ இனப்பெருக்கத்திற்கு அனுமதிக்க வேண்டும்.
- தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெட்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு முறையிலோ, கூட்டமாகவோ இனப்பெருக்கத்திற்கு அனுமதிக்க வேண்டும்.
- கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களுக்கு இடைநிலை பருவங்களாக விளங்கும் உயிரிகள் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டகையை சுற்றியுள்ள மழைநீரை அகற்ற வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

*எதிர் வரும் ஐந்து நாட்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 25 - 29⁰ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 18 - 22 ⁰செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 16-18 கி.மீ. ஆகவும் பெரும்பாலும் மேற்கு - தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரைகள்**

**தோட்டக்கலை பயிர்கள்**

*மழை இருப்பதால் இளம் இரப்பர், பழ மரங்கள் மற்றும் வாழை மரங்களில் நீர் தேங்காமல் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும். உரங்கள் மற்றும் மருந்துகள் தெளிப்பதை தவிர்க்கவும்.*

**ரப்பர்**

*நெகிழி மழை தடுப்பான்களை மரத்தின் பால் வடியும் பகுதிக்கு மேல் பொருத்தி மழை காலத்திலும் பால் வெட்டலாம்.*

**வாழை**

*அறுவடை செய்யப்பட்ட வாழை தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும். இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.*

**மரவள்ளி**

*நுண்ணுயிரியினால் வேர் அழுகல் நோய் வராமல் பாதுகாக்க நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க., கோவை**